மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.
முன்னிலை: திரு.D.ராம்கணேஷ் M.A., M.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி.
2022ம் வருடம் ஏப்ரல் மாதம் 19ம் நாள்
சுபகிருது ஆண்டு சித்திரை மாதம்06ம் நாள் செவ்வாய்கிழமை
CNR No. TNMD190000 16 -2010
**I.A.No. 90/2022**
**in**
**O.S No. 05/2021**

1. அம்மாவாசை
2. சக்கரையம்மாள்

... மனுதாரர்கள்/வாதிகள்

//எதிர்//

சங்கர்

.... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 05.03.2022ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N. சக்திவேல் மற்றும் திருமதி S. நாச்சியார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.G.M. ரமணி மற்றும் திருமதி S. சடைமுனி அவர்கள் ஆஜராகியும், கடந்த 11.04.2022ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான....

**உத்தரவு**

இந்த நிர் மனுவும் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட 27.03.1972ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகலை இரண்டாம்நிலை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள அனுமதி கோரி இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 65(A) ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:**

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் என்றும், அசல் வழக்கானது பிரதிவாதியைக் கட்டுப்படுத்தி தாவா சொத்தினைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கானது வாதிகள் தரப்பு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், பிராதுடன் தாக்கல் செய்யப்பட்ட 27.03.1972ம் தேதியிட்ட கிரைய

பத்திரத்தின் சான்றிட்ட நகல் தற்சமயம் வாதிகள் தரப்பு சான்றாவணமாக இரண்டாம்நிலை சாட்சியமாக குறியீடு செய்யப்பட வேண்டியது அவசியமானதாக உள்ளது என்றும், மேற்படி மனுவினை அனுமதிக்காவிடில் மனுதாரர்கள்/வாதிகளுக்கு பெருத்த கஷ்டம் ஏற்பட்டு விடும் என்றும், எனவே மனு அனுமதிக்கப்படவேண்டும் என்று வாதுரைக்கப்பட்டது.

**<u>2) எதிர்மனுதாரர் தரப்பு எதிர் உரையின் சுருக்கம்:</u>**

மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாவா சொத்தை பொறுத்து மனுதாரர்கள்/வாதிகளால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுவில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் சட்டப்படியோ பொருண்மைபடியோ ஏற்கத்தக்கதல்ல என்றும், தாவா சொத்தினை பிரதிவாதி தான் அனுபவம் செய்து வருகின்றார் என்றும், வழக்கிற்காக மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன என்றும், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 27.03.1972ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் முழுமையாக மறுக்கப்படுகின்றது என்றும், மனுவில் மேற்படி 27.03.1972ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகலை குறியீடு செய்வதற்கு அனுமதிக்க வேண்டுமென்று தான் குறிப்பிட்டுள்ளதே தவிர மேற்படி கிரைய பத்திரத்தின் அசல் ஆவணம் எங்குள்ளது என்பது பற்றி குறிப்பிடப்படவில்லை என்றும், அவ்வாறு அசல் ஆவணம் எங்குள்ளது தொடர்பாக தெளிவுப்படுத்தாத நிலையில் மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றும், மனுதாரர்கள்/வாதிகள் உண்மைநிலையை மறைத்து சான்றிட்ட நகலை குறியீடு செய்ய முயற்சிப்பது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றும், அசல் வழக்கு நடவடிக்கையினை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் எதிர்வாதம் செய்யப்பட்டது.

3) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு அனுமதிக்கக்கூடியதா என்பதை தீர்வு காண வேண்டியது அவசியமானதாகும்.

**தீர்வு:**

4) இருதரப்பு வாதுரை மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்யும்பொழுது, இந்த நிர் அசல் வழக்கானது வாதிகள் தரப்பு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 27.03.1972ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் அசல் வழக்கு பிராதுடன் 1வது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர்வாதம் செய்துள்ளது போல் மேற்படி 27.03.1972ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் அசல் ஆவணம் எங்குள்ளது பற்றிய விபரங்கள் மனுவில் குறிப்பிடப்படவில்லை. இருந்தபோதிலும் மேற்படி 27.03.1972ம் தேதியிட்ட கிரைய ஆவணமானது பதிவு செய்யப்பட்ட ஆவணமாக உள்ளது. பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள்

பொது ஆவணங்கள் என்ற அடிப்படையில் அதனை சாட்சியமாக குறியீடு செய்யலாம் என்பதும் இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 65 மற்றும் 77ன்படி நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடாகும். மேற்படி சட்டப்பிரிவிலும் அடியிற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**Sec. 77** . Proof of documents by production of certified copies. - Such certified copies may be produced in proof of the contents of the public documents or parts of the public documents of which they purport to be copies.

அதுவும் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் அடியிற்கண்ட வழக்கில் முன்தீர்ப்பு வழங்கப்பட்டு **2017(1) TNMAC 518 (All) (DB).** சட்ட இதழில் பதிவுகளும் ஏற்பட்டுள்ளது.

**New India Assurance Co. Ltd. v. Amzad Khan,**

**Section 77 – Indian Evidence Act 1872**

**Document is a public document:** - The document is a public document and the contents of the same were not required to be proved in view of Section 77 of the Evidence Act.

5) மேலும் இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 114(e)ன்படி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 27.03.1972ம் தேதியிட்ட கிரைய ஆவணமானது பதிவு செய்யப்பட்ட பொது ஆவணம் என்ற அடிப்படையில் மேற்படி ஆவணப்பதிவு செய்தது தொடர்பான நடைமுறையும் அலுவல் நடைமுறை தொடர்பானதாக இருப்பதால் அதுவும் முறைப்படி நடந்ததாகவே அனுமானம் செய்யலாம் என்பதும் மேற்படி சட்டப்பிரிவின்படி நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடாகும். மேற்படி சட்டப்பிரிவிலும் அடியிற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

Section 114. Court may presume existence of certain facts. - The Court may presume the existence of any fact which it thinks likely to have happened, regard being had to the common course of natural events, human conduct and public and private business, in their relation to the facts of the particular case.

The Court may presume-

**(e) that judicial and official acts have been regularly performed.**

அதுவும் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் அடியிற்கண்டவாறு முன்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

**Lalitha Mohan (v) Pratap K. Moturi, 2020(2) CTC 129(Mad) (DB): 2020(2) MLJ 430 (Mad): 2020(2) MWN (Civil) 472 (Mad)**

**Section 114(e) – Scope** – Section 114(e) of the Evidence Act, 1872 read with Section 60 of the Registration Act do create a presumption. Such a presumption is attributable to the official act of the registration.

6) எனவே மேற்கண்ட இருதரப்பு வாதுரை மற்றும் வழக்கு பொருண்மையின்படி இயற்கை நியதியின் பொருட்டும் அசல் வழக்கு நடவடிக்கையில் மேலும் காலதாமதம் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும் இம்மனு அனுமதிக்கப்படுவதே அவசியமானதாகவும், நியாயமானதாகவும் இந்நீதிமன்றம் கருதுகிறது. இருந்த போதிலும் இம்மனு நடவடிக்கையினால் வழக்கு நடவடிக்கையில் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட காலவிரையம் மற்றும் பொருளாதார விரையத்தினை ஈடு செய்யும் பொருட்டு மனுதாரர்கள் செலவு தொகை செலுத்துவதின் பேரில் இம்மனு அனுமதிக்கக்கூடியது என தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்கள்/வாதிகளால் வழக்கு நடவடிக்கையில் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு ஏற்பட்டுள்ள காலவிரையம் மற்றும் பொருளாதார விரையத்தினை ஈடுசெய்யும் பொருட்டு மனுதாரர்கள்/வாதிகள் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு ரூ.500/- செலவு தொகையாக 26.04.2022ம் தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் அனுமதிக்கக் கூடியது என உத்தரவிடப்படுகின்றது.

அடுத்த கேட்பு நாள் : 26.04.2022

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

D RAMGANESH
Digitally signed by D RAMGANESH
Date: 2022.04.19 17:19:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வாடிப்பட்டி.